டீசல் தட்டுப்பாட்டின் காரணமாக சில பேருந்துகள் நிறுத்தப் பட்டதாகக் குறிப்பிட்டார்கள். இதுவரையிலும் அவர் என்னிடத்திலே அதுபோன்ற குறிப்புகளைத் தரவில்லை. அப்படி ஏதாவது இருக்குமானால், உடனடியாக அந்தப் பேருந்துகள் நாளையே இயக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 485 டாக்டர் பெ. வீரபாண்டியன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

485—

செங்கத்தில் போக்குவரத்துக் கழகப் பணிமனை, சிற்றுண்டிச் சாலை நிறுவுதல்.—

*14468 டாக்டர் பெ. வீரபாண்டியன்:

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கத்தில் போக்குவரத்துக் கழகப் பணிமனையும் மற்றும் சிற்றுண்டிச்சாலையும் நிறுவும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

முற்பகல் 10–20

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் தொகுதியில், செங்கம், புதுப்பாளையம் ஆகிய ஒன்றியங்களில் 7 டவுன் பேருந்துகள் செல்கின்றன. அதுமட்டுமல்ல, செங்கம்-சென்னை, செங்கம்-பெங்களுர் ஆகிய வழித்தடங்களில் கிட்டத்தட்ட 20 பேருந்துகள் செங்கத்தில் பணிமனை இல்லாத காரணத்தாலே திருவண்ணாமலையில் சென்று தங்கி விடுகின்றன. செங்கத்திலேயிருந்து திருவண்ணாமலை சென்று மீண்டும் திரும்பி வர வேண்டுமென்றால், கிட்டத்தட்ட ஒரு பஸ் 70 கிலோ மீட்டருக்குத் தேவையில்லாத பயணம் செல்ல வேண்டும். 20 பஸ்கள் என்றால் 1,400 கிலோ மீட்டர்

மாதத்திற்கு எரிபொருளாகக் கிட்டத்தட்ட 70,000 ரூபாய் போக்குவரத்திற்கு விரயம் ஆகிறது. வழித்தடங்களைத் தொடங்க வேண்டுமென்றால் செங்கத்தில் பணிமனை வேண்டும் என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். எனவே, அமைச்சரவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்று கேட்க விழைகின்றேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, செங்கத்திலிருந்து இரவு நேரங்களில் பல தங்கும் பேருந்துகளினுடைய எண்ணிக்கை குறைந்தபட்சம் 15 முதல் 20 வரையிலும் இருந்தால்தான் அங்கே ஒரு பணிமனையை அமைக்க முடியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்றபொழுதே, 7 பேருந்துகள்தான் அங்கே இரவு நேரங்களிலே தங்குகிற—நிறுத்தப்படுகிறது என்ற குறிப்புகளை இங்கே சொன்னார்கள். ஆகவே, குறிப்பாக ஒரு பணிமனை அமைக்கப்பட வேண்டுமென்று சொன்னால் குறைந்தபட்சம் 20 பேருந்துகள் இருக்குமேயானால் அங்கே பணிமனை அமைக்கலாம் ; சிற்றுண்டிச்சாலைகள் வைக்கலாம் ; அதற்கான நிர்வாகச் செலவுகள் ஏற்படுகின்றபொழுது அதைச் சரிக்கட்ட முடியும். ஆகவேதான் அரசு இதுபோன்ற கோரிக்கைகளைப் பரிசீலிக்க முடியவில்லை—இல்லை என்று குறிப்பிட்டேன்.

டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டது, 20 பேருந்துகள் தான் ; டவுன் பஸ் தான் 7 தவிர, மற்றபடி செங்கம்—சென்னை, செங்கம்—பெங்களூர் ஆகியவைகள் ஒட்டுமொத்தமாக 20 பேருந்துகள் திருவண்ணாமலையில் தங்குகின்றன. அதோடு அன்றி, செங்கத்தில் துக்காப்பேட்டை என்ற இடத்தில், கால்நடை மருத்துவமனைக்குக் கிழக்கேயும், சகாயமாதா பள்ளிக்குத் தெற்கேயும், ரோடு ஓரத்தில் அருமையான இடம் இருக்கிறது. ஏற்கனவே அங்கே அதிகாரிகள் தேர்வு செய்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் கனிவன்புடன் அதிகாரிகளை செங்கத்திற்கு அனுப்பி வைத்தால், சட்டமன்ற உறுப்பினராகிய நானும் அவர்களோடு கலந்து பணிமனைக்குண்டான இடத்தை தேர்வு செய்வதற்குண்டான உதவியை நானும் செய்வேன். அதற்கு ஆவன செய்வாரா என்று கேட்க விழைகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எதிர்காலத்திலே அவருடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 486, டாக்டர் ஜெய்சன் ஜேக்கப், மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர்.